செ.வெ.எண்:41 நாள்:18.07.2018

## பத்திரிக்கைச் செய்தி

# தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் LCO எண் பெற்றுள்ள உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்களின் கவனத்திற்கு

குறைந்த கட்டணத்தில் நிறைவான கேபிள் டிவி சேவையை பொது மக்களுக்கு வழங்கும் உயரிய நோக்கத்துடன் தமிழகம் முழுவதும் கேபிள் டிவி சேவையினை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வழங்கி வருகின்றது.

ஈரோடு மாவட்டத்தில் 3,13,336 அரசு கேபிள் டிவி சந்தாதாரர்கள் உள்ளனர். அவர்களுக்கு அரசு செட்டாப்பாக்ஸ்கள் இந்நிறுவனத்தில் பதிவு பெற்றுள்ள உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்களின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

சந்தாதாரர்கள் ஆதார் நகல் உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்களிடம் வழங்கியும் அவர்களுக்கு அரசு செட்டாப்பாக்ஸ்கள் வழங்காமல் மேலும் அனலாக் நிலுவைத் தொகையை அரசுக்கு செலுத்தாமல் இருப்பது சட்ட விரோதமாகும்.

ஈரோடு மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் பதிவு பெற்றுள்ள 713 உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்களில் 518 உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் அரசு செட்டாப்பாக்ஸ்கள் 77,500 பெற்று சந்தாதாரர்களுக்கு வழங்கியுள்ளனர்.

அரசு சிக்னல் கேபிளை துண்டித்தோ, தடை செய்தோ தனியார் நிறுவனங்களின் சிக்னலை கொண்டு செல்லும் உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் மீதும், சந்தாதாரர்களிடம் கேபிள் கட்டணத்தை வசூலித்து அதை அரசுக்கு செலுத்தாமல் நிலுவை வைத்துள்ள உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் மீதும், அரசு செட்டாப்பாக்ஸ்கள் பெறாமல் உள்ள உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் மீதும், அரசு செட்டாப்பாக்ஸ்கள் குறைந்த எண்ணிக்கையில் பெற்றுள்ள உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் மீதும், அரசு செட்டாப்பாக்ஸ்கள் பெற்றும் சந்தாதாரர்களுக்கு வழங்காமல் செட்டாப்பாக்ஸ் செயலிழக்கம் செய்துள்ள உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் மீதும், அரசு செட்டாப்பாக்ஸ் குறித்து சந்தாதாரர்களிடம் தவறான கருத்துக்களை கூறி தனியார் நிறுவன செட்டாப்பாக்ஸ்களை வழங்கும் உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் மீதும், நடவடிக்கை எடுப்பதோடு அவர்கள் பதிவு ரத்து செய்யப்படும் மேலும் அரசு செட்டாப்பாக்ஸ்களை உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் சந்தாதாரர்களுக்கு வழங்காவிட்டால் புதிய உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் நியமிக்கப்படுவர் என ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.எஸ்.பிரபாகர் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், ஈரோடு